Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை அவர்களின் நவடிக்கைகள்,
முன்னிலை : திரு, எஸ், தனராசு. பி,இ,.

ந,க,எண்,562/2020-புமா

நாள்.19.11.2020

பொருள்

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம் - கறம்பக்குடி வட்டம் - பிலாவிடுதி கிராமம் சர்வே எண். 78/5 ல் 6400.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படவுள்ள உத்தேச தரைதளம் மற்றும் 3 தளங்களுடன் கூடிய 176 தொகுப்பு குடியிருப்பு கட்டிடம் கட்ட தொழில்நுட்ப அனுமதி வழங்குவது - தொடர்பாக,

பார்வை

1. செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அவர்களின் கடிதம் எண்.135/AE(P)/2020, நாள்,09.07.2020.
2. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.இ5 /15080/2020 நாள்,15.09.2020.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றிக்கை ந.க.எண்,4367/ 2019- ந.ஊ.2 நாள்,31.10.2019.
4. அரசாணை நிலை எண்.86. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிதுறை நாள்,28.03.2012.
5. நன்னிலை வரி கட்டணம் மனுதாரர் செலுத்தி இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்த நாள்.18.11.2020.

உத்தரவு

புதுக்கோட்டை மாவட்டம் - கறம்பக்குடி வட்டம் - பிலாவிடுதி கிராமம் சர்வே எண். 78/5 ல் 6400.00 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படவுள்ள உத்தேச மனையிடத்தில் தரைதளம் மற்றும் 3 தளங்கள் கொண்ட 176 குடியிருப்புகள், கொண்ட மனையிடத்திற்கு A முதல் S என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும். அம்மனையில் அமையும்,

கட்டிட பரப்பு விவரம்

தள விவரம்	தரைதளம் (ச,மீ)	முதல்தளம் (ச,மீ)	2-ம் தளம் (ச,மீ)	3-ம் தளம் (ச,மீ)	மொத்த பரப்பு (ச,மீ)	குடியிருப்பு களின் எண்ணிக்கை
Block (A1)	148.24	148.24	148.24	148.24	592.96	16Nos
Block (B1-B2)	590.64	590.64	590.64	590.64	2362.56	64Nos
Block (C1-C2)	884.82	884.82	884.82	884.82	3539.28	96 Nos
Total Area	1632.70	1632.70	1632.70	1632.70	6494.80	176 Nos

FSI Area - 1.015 Plot coverage - 25.37%

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு பார்வை 3-ல் கண்ட அதிகாரப் பகிர்மானத்திற்கு உட்பட்டு கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மனை ஒப்புதல் மற்றும் கட்டிட வரைபடத்திற்கு க.வ/மா.ந.ஊ.அ.(பு.மா)எண்-01/2020 என எண்ணிடபட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது,

சிறப்பு நிபந்தனைகள்

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundation.

2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local bodies Act. Planning permissions is issued subject to the condition that the applicant/ developer and also the architects/ Licensed Surveyors' and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

3, நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதி படுத்தவில்லை, தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது, அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளது என்று பார்க்கப்படுகிறது, சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீதுள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும், மேலும் அதன் மேல் வேறு யாரனேும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

4, கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில் பொதுமக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் வளர்ச்சிக் கட்டுபாட்டு விதிகளின்படி தளப்பரப்பு விகிதம்(FSI) திறவிடங்கள் (Setback) வாகன நிறுத்துமிடம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

5, கட்டிடம் கட்டும்போது அரசு அனுமதி பெற்ற வயரிங் காண்ட்ராக்டர் மூலமாக வயரிங் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

6 OSR (Park) என ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

11/12/20

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

<u>நிபந்தனைகள்</u>

1) உத்தேச குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar System அமைக்கப்பட வேண்டும்.

2) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.

4) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எந்த மாற்றமும் செய்யக்கூடாது, மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் நகர் ஊரமைப்பு அலுவலகம் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு அரசாணை எண்,138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002 -ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியாக வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

7) மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8) உத்தேச கட்டுமானத்தின் விதிப்படித் தேவையான அளவிற்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9) அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள் 03.11.2004-ன்படி செப்டிக் டேங்கில் U Trap அமைத்தல் வேண்டும்.

10) சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.

11) அங்கீகாரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது உத்தேச நிலத்தில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

11/12/20

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

12) உத்தேச கட்டிடத்தின் கழிவுநீர் வெளியேறுதல் தொடர்பாக - STP Design- ற்கு தமிழ்நாடு மாசு கட்டுபாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25(Water Act) -ன்படி மேற்படி வாரிய இணக்கம் (Consent) பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மனுதாரார் நன்னிலை வரி கட்டணம் ரூ-18,000/- ((ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்), கூராய்வு கட்டணம் ரூ-13,000/-(ரூபாய் பதிமூன்றாயிரம் மட்டும்), மற்றும் விளம்பரப் பலகை கட்டணம் ரூ-1500/-(ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) உரிய கணக்கில் செலுத்தியுள்ளார்.

ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

ஒப்புதலளிக்கப்பட்ட உத்தரவு நகல் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்று அனுப்புமாறு தலைவர், பிலாவிடுதி ஊராட்சி, கறம்பக்குடி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

19/11/20

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
புதுக்கோட்டை.

19/11/2020 19/11/2020

இணைப்பு
உத்தரவு மற்றும் இருதொகுப்பு
வரைபடங்கள்,

பெறுநர்
தலைவர்,
பிலாவிடுதி ஊராட்சி,
கறம்பக்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

நகல் (பத்தி ஒன்று மட்டும்)

1. The Executive Engineer,
   TamilNadu Slum Clearance Board,
   Trichy Division, Madurai road,
   Palakarai, Trichy-20.

2, தொழில்நுட்ப வைப்பறை - ஒரு தொகுப்பு வரைபடத்துடன்.

11/12/20
EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

கட்டிட வரைபட அனுமதி

பிலாவிடுதி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள் நகல் எண்:1/2020ன்படி நாள். .11.2020-ன் படி தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களின் மொத்தம் 6494.80 ச.மீட்டரில் 176 அடுக்கு மாடி குடியிருப்புகள், கட்டிட வரைபட அனுமதி வழங்கி இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு 03.12.2020 முதல் 02.11.2021 வரை ஓராண்டு காலம் அமுலில் இருக்கும்.

தலைவர்
PRESIDENT
Pilaviduthi Village Panchayat

11/12/20
EXECUTIVE ENGINEER
SLUM CLE... NCE BOARD
TRICHY DIVISION.

பிலாவிடுதி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.விஜயரவி பல்லவராயர் B.Com., அவர்கள்

ந.க.எண்: 1/2020 நாள்:03.12.2020

பொருள்: கட்டிட வரைபட ஒப்புதல்: புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் பிலாவிடுதி ஊராட்சிக்கு உட்பட்ட நில அளவை எண்.78/5-ல் 6400 சதுரமீட்டர் பரப்பளவு உள்ள இடத்தில் தரைத்தளம் மற்றும் மூன்று தளங்கள் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள் பட்டுமானத்திற்கு **கட்டிட வரைபட அனுமதி வழங்கி உத்தரவிடல்.**

1. அரசாணை (நிலை) எண்: 78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை ந.வ.து(3) நாள்: 04.05.2017
2. செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அவர்களின் கடித எண்: 135/AE(P)/2020 நாள்: 09.07.2020
3. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.இ5/ 15080/2020 நாள்: 15.09.2020
4. நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றிக்கை ந.க.எண்.4367/2019-ந.ஊ.உ.நாள்: 31.10.2019.
5. அரசாணை நிலை எண்.86 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 28.03.2012.
6. நன்னிலை வரிக்கட்டணம் மனுதாரர் செலுத்தி இவ்வலுவலகத்தில் சமர்ப்பித்தல்நாள்: 18.11.2020.
7. உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் கடித எண்: 562/2020 கு.மா.நாள்: 11.11.2020.

11/12/20

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

உத்தரவு:

கறம்பக்கு ஊராட்சி ஒன்றியம் பிலாவிதி கிராம ஊராட்சி புல எண்: 78/5 மனை எண்: 1 முதல் 176-ல் நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் பார்வை (1)ல் காணும் விண்ணப்பதாரர் அடுக்குமாடி குடியிருப்பு வீடுகள் கட்டிட வரைபட அனுமதி கோரி விண்ணபித்துள்ளார்.

எனவே விண்ணப்பதாரர் நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசைமாற்றுவாரியம் என்பவர்க்கு பிலாவிடுதி ஊராட்சி கிராம புல எண்: 78/5 தரைத்தளம் மற்றும் மூன்று தளங்கள் மொத்தம் 6494 .80 ச.மீட்டர் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கு.

மேலும் இவ்வூராட்சிக்கு கட்டப்படும் கட்டிடத்திற்கு உரிய ஊராட்சிக்கு செலுத்திய கட்டணம் ரூ.7,62,545/- (ஏழு இலட்சத்து அறுபத்து இரண்டாயிரத்து ஐநூற்று நாறப்பத்து ஐந்து மட்டும்) பல்வகை ரசீது குடிசை மாற்று வாரிய நிர்வாக பொறியாளர் மூலம் செலுத்தப்பட்டுள்ளது (இரசீது எண்.030812 நாள்: 03.12.2020 காசோலை எண்: 000357 நாள்: 03.12.2020 வங்கியின் பெயர் HDFC Bank திருச்சிராப்பள்ளி.

1.	அனுமதி கட்டணம்	- 6,49,532.00
2.	வளர்ச்சி கட்டணம்	- 62,028.00
3.	பாதுகாப்பு கட்டணம்	- 1,000.00
4.	ஆய்வு கட்டணம்	- 5,000.00
5.	வரைபட அனுமதி கட்டணம்	- 8,785.00
6.	கழிப்பறை வரைபட கட்டணம்	- 35,200.00
7.	காலியிட வரிகட்டணம்	- 1,000.00
		7,62,545.00

11/12/20

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

நிபந்தனைகள்

1. வரைபடத்தில் அங்கீகரிக்கப்பட்ட அளவுக்குள் கட்டிடம் கட்டப்பட வேண்டும் கூடுதலாக கட்டிடம் கட்டக்கூடாது.
2. சர்வே எண்ணில் மட்டும் வீடு கட்டப்பட வேண்டும்.
3. வரைபடத்தில் உள்ளத்தில் மாற்றம் ஏதும் செய்தால் கட்டிடத்தின் உரிய திருத்த வரைபட அனுமதி ஒப்புதலை பிலாவிடுதி கிராம ஊராட்சி அவர்களிடமிருந்து பெற்ற பின்னரே பணி செய்யப்பட வேண்டும்.
4. கட்டிடம் கட்டுவதற்கு வரைபட அனுமதி 03.12.2020 முதல் 02.11.2020 வரை ஓராண்டு காலம் அமுலில் இருக்கும்.
5. கட்டிடம் கட்டி முடித்த பின் திருந்திய வரைபடம் இவ்வலுவலகத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
6. கட்டிடத்தின் முன்பக்கம் 8 அடியும் காலி இடம் இருக்க வேண்டும். இருப்பக்கங்களிலும் தலா 5 அடி இடம் வீட்டு கட்டப்பட வேண்டும்.
7. கட்டிடம் கட்டி முடித்தபின் தாங்களே கண்டிப்பாக கட்டிடத்தின் முன் கழிவு நீர் வாய்க்கால் கட்டிக்கொள்ள வேண்டும்.
8. கட்டிடம் கட்டி முடித்தவுடன் கட்டாயம் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்க வேண்டும்.
9. கட்டிடம் கட்டுபவர்கள் மழைநீரை சேமிக்கின்ற வகையில் கட்டிடத்தில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்திட வேண்டும் இவ்வமைப்பு வரைபடத்தில் காண்பிக்கப்பட வேண்டும்.
10. கட்டிடம் கட்டி முடித்து குடியேறிய பின்னர் குடியிருப்போர் பயன்படுத்தும் கழிவுநீர் வீட்டிற்கு வெளியிலோ, சாலைகளிலோ விடக்கூடாது. இந்நீரை வீட்டிற்குள்ளேயே உள்ள காலி இடத்தில்

11/12/20

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD,
TRICHY DIVISION.

(அமைக்கப்பட தோட்டம் வசதிக்குள்) பயன்படுத்துமாறு அமைப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

11. வரைபடத்தில் உள்ள கட்டிடத்தின்படி கட்டிடம் கட்டிய பிறகு இம்மனைக்கு செல்ல உரிய சாலை வசதி தங்களின் முழுப்பொறுப்பிலே செய்து கொள்ள வேண்டும். ஊராட்சியில் பொது இடங்களில் இருந்து வழங்கிட உரிமை கோர இயலாது என்பது மனுதாரருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

12. நில அளவை எண்: 78/5 உரிய வரைபடத்தில் உள்ள சாலை மற்றும் ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் (வரத்துவாரி) ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டினாலோ, இச்சொத்தின் மீது நீதிமன்ற வழக்குள் ஏதும் இருப்பது தெரிய வந்தாலோ, மேற்கண்ட நிபந்தனைகள் மீறும்பட்சத்திலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாகக் கட்டிடம் கட்டினாலோ வழங்கப்பட்ட அனுமதி இரத்து செய்யப்படும்.

தலைவர்
PRESIDENT
Pilaviduthi Village Panchayat

இணைப்பு:

வரைபட நகல்கள்

நகல்:

நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்,
திருச்சிராப்பள்ளி கோட்டம்,
மதுரை ரோடு பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி.

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.
11/12/20



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate